## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 1958 / 2013 / எம்சி. 8 நாள் : 15.03.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **18.03.2013 திங்கள்கிழமை பிற்பகல் 2.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல்/

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - மார்ச் 2013

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பொறியியல் பிரிவு – மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் செயல்படுத்தவும் அதற்கான திட்ட ஆய்வு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்வதற்கு முன் தொகை ரூ.2,00,000/- செலுத்தவும் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க திட்ட மதிப்பீட்டு தொகைக்கு 1 சதவீதம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் விடுபட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கான மீத ஆய்வு தொகை (ரூ.60.37 லட்சம் - ரூ.37.81 லட்சம்) ரூ.22.56இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | Jnnurm - பில்லூர் குடிநீர்த் திட்டம் பகுதி I - இராமகிருஷ்ணாபுரம் பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான பீளமேடு, மசக்காளிபாளையம், சௌரிபாளையம், வரதராஜபுரம், நீலிக்கோணாம்பாளையம், சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், SIHS காலனி மற்றும் நேதாஜிபுரம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பதிக்கப்பட்ட ஏ.சி. பிரதான குழாய்களுக்கு பதிலாக 1100 மி.மீ. மற்றும் 700 மி.மீ விட்டமுள்ள இரும்பு குழாய்கள் பதித்தல்- மற்றும் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலான விலை விகிதத்தில் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதால் ஏற்படும் கூடுதல் செலவீனத்தை, மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் V – நஞ்சுண்டாபுரத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் - ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது - ஒப்பந்த காலம் நீடிப்பு செய்தல் - கூடுதல் செலவினத்தை பொதுநிதியிலிந்து செலவழித்தல் - ஒப்பந்தம் உறுதி செய்யும் குழுவிற்கு அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.1 - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம்- 6 எண்ணிக்கையிலான ஆவின் பாலகங்கள் - வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் தொடர்பு. |
| 7 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.83-ல் T.K. மார்க்கெட் மத்தியில் தென்வடல் ரோட்டின் இருபுறமும் தரைக் கடையாக மாற்றி ஏல இனத்தில் சேர்த்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 8 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண். 82-ல் உள்ள ஈஸ்வரன் கோயில் உள்ள நடைபாதை கடைகளுக்கு நிலுவை வாடகைத் தொகை வசூலித்தல் மற்றும் அபராத வட்டி தொகையில் 50 சதவீதம் தள்ளுபடி செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 9 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் வார்டு எண்.71 புலியகுளம் ரோட்டிலுள்ள மயான புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டிடம் - வாடகை நிர்ணயம் செய்து பொது ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம்- வார்டு எண்.81 –ல் வெரைட்டி ஹால் சாலை திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள கடை (Ration Shop) – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **11** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வரவினங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளுக்கு மத்திய கலால் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய சேவை வரியினை செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **12** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - 4 குத்தகை இனங்கள் - 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை- பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **13** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் 2013-2014-ம் ஆண்டிற்கு சம்மதக் கடிதம் வழங்கிய குத்தகைதாரர்களுக்கு 5% மற்றும் 10% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - சம்மதக் கடிதம் வழங்கப்படாத இனங்கள் மற்றும் மூன்றாண்டு முடிவடைந்த இனங்களுக்கு பொது ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **14** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - குத்தகை இனங்கள் 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை – 3 குத்தகை இனங்கள் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **15** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனம் - 2013-2016 ம் ஆண்டு- செட்டி வீதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **16** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - துடியலூர் வணிக வளாகத்தில் உள்ள கடை எண் 31 மற்றும் 44 - மறுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **17** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2013-2016ம் ஆண்டு - காந்திபார்க் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **18** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண். 24 - ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடை எண்.29 மற்றும் 32- உரிமதாரர் தொகை செலுத்தாததால் கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டது - வைப்புத்தொகையை பறிமுதல் செய்து மறுஏலத்திற்கு கொண்டுவருதல் மற்றும் உரிமதாரரை கருப்புப் பட்டியலில் சேர்த்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **19** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் -மருதமலை அடிவாரம் பகுதியில் 160 சதுரடி உள்ள கடை எண் 6 - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **20** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - 2013-2016 ம் ஆண்டிற்கு உரிமம் ஒப்படைத்தல் - சௌரிபாளையம் ஆடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **21** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம்– பியூன்ஸ் காலனி மற்றும் மேட்டுப்பாளையம் ரோடு வரை புதிய குடிநீர் பிரதான பகிர்மான குழாய்கள் அமைத்தல் –ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல்– தொடர்பாக. |
| **22** | பொறியியல் பிரிவு - வார்டு எண்.50ல் இராஜு சாலை தென்புறத்தில் கடைகள் கட்டுதல் – ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **23** | நகரமைப்பு பிரிவு – திட்டசாலை அமைக்கும் பணிகளை விரைந்து மேற்கொள்ள Transfer of Development Rights என்ற சட்டத்தை கோயபுத்தூர் மாநகராட்சி சட்டம் 1981ல் கூடுதல் விதிகளாக சேர்க்க அரசினை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **24** | நகரமைப்பு பிரிவு- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இருந்து நேரு விளையாட்டு அரங்கத்தினை சுற்றியுள்ள கடைகளை மட்டும் மாநகராட்சி வசம் எடுத்து மாநகராட்சி சட்ட விதிகளின்படி வாடகைக்கு விடவும் அரசின் அனுமதி கோர மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| **25** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்துவரும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலிப் பணியாளர்களை மாநகராட்சியில் காலமுறை ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்ய செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பிவைக்க மன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **26** | பொறியியல் பிரிவு - மூன்று நடைபாதை மேம்பாலங்கள் அமைத்தல் - அரசின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **27** | Jnnurm - திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - தினசரி கூடுதலாக சேகரமாகும் திடக்கழிவினை சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளதனை கருத்தில் கொண்டு 500.00 மெட்ரிக் டன் எடை கொள்ளளவிலான குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் (Waste-to-Energy Plant) அமைப்பினை வெள்ளலூர் குப்பைக்கிடங்கு அமைந்துள்ள இடத்திலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு தகுதி வாய்ந்த இடத்திலோ தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடன் நிறுவி செயல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

**(குறள் - 557)**

**விளக்கம்**

மழைத்துளி மாந்தர்க்கு மட்டுமின்றி நிலவளத்திற்கும் மற்ற உயிரினங்களுக்கும் எவ்வாறு உலகின் இன்றியமையாததோ, அதேபோல் ஆள்வோரின் அருள் உயிரினங்களுக்கு இன்றியமையாதது.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

| | |
|---|---|
| **பொருள்** | கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் செயல்படுத்தவும் அதற்கான திட்ட ஆய்வு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்வதற்கு முன் தொகை ரூ.2,00,000/- செலுத்தவும் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க திட்ட மதிப்பீட்டு தொகைக்கு 1 சதவீதம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் தொடர்பு. |
| **பார்வை** | தலைமைப் பொறியாளர்/ த.கு.வ.வாரியம்,கோவை -43. அவர்களது கடிதம் ந.க.எண் 7284/F/. WSIS/CBEcorpn/AE (D1)/CE/CBE நாள் 07.08.2012 |

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் செயல்படுத்தவும் அதற்கான திட்ட ஆய்வு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்வதற்கு முன் தொகை ரூ.2,00,000/- மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க திட்ட மதிப்பீட்டு தொகைக்கு 1 சதவீதம் திட்ட அறிக்கை தயார் செய்த பிறகு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துமாறு பார்வையில் கண்ட கடிதத்தில் தலைமை பொறியாளர் அவர்கள் வாரிய நடவடிக்கை எண் 22 நாள் 28.02.2011 ன்படி திருத்திய மாமன்ற தீர்மானம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் செயல்படுத்தவும் அதற்கான திட்ட ஆய்வு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்வதற்கு முன் தொகை ரூ.2,00,000/- மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க திட்ட மதிப்பீட்டு தொகைக்கு 1 சதவீதம் திட்ட அறிக்கை தயார் செய்த பிறகு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண் 1987/ 2010/ ப.வ. (எம்)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 394 நாள் 18.03.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் விடுபட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் வடிவமைப்பதற்காக ரூ.73.00 லட்சத்திற்கு ஆய்வு மேற்கொள்வதற்கான ஆய்வு எல்லை விதிமுறை (Terms of Reference) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது.

தலைமை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (கடித எண் 10924/F.UGSS/CBECorpn/AE(D1)/CE/CBE/ நாள்13.12.2012). அவர்களது கடிதத்தில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் விடுபட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கான மீத ஆய்வு தொகை ரூ.22.56இலட்சம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் விடுபட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கான மீத ஆய்வு தொகை (ரூ.60.37 லட்சம் - ரூ.37.81 லட்சம்) ரூ.22.56இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண் 2710/ 2012/ ப.வ.(எம்)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 395 நாள் 18.03.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

கோவை மாநகராட்சி, பில்லூர் குடிநீர்த் திட்டம் பகுதி I ன் கீழ் கட்டப்பட்ட இராமகிருஷ்ணாபுரம் பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளான பீளமேடு, மசக்காளிபாளையம், சௌரிபாளையம், வரதராஜபுரம், நீலிக்கோணாம்பாளையம், சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், SIHS காலனி மற்றும் நேதாஜிபுரம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பதிக்கப்பட்ட ஏ.சி. பிரதான குழாய்கள் பழுதடைந்துள்ளதால் இக்குழாய்களுக்கு பதிலாக 1100 மி.மீ. மற்றும் 700 மி.மீ விட்டமுள்ள இரும்பு குழாய்களை (MS Pipe) 5.70 கி.மீ. நீளத்திற்கு அமைக்க, 2009–2010–ம் ஆண்டிற்கான “ இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் மானிய நிதி ” மற்றும் மாநகராட்சி பங்கு நிதியுடன் சேர்த்து ரூ. 8.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்(டி): 72, நாள்: 15.02.2011–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த 30.03.2011–ல் முதன் முறையாக E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 10.99% கூடுதலாக இருந்ததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு, இரண்டாம் முறையாக 28.09.2011–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மூன்று நிறுவனங்கள் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியதில், குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளியாக மதிப்பீடு தொகைக்கு 2.58% குறைவாக வழங்கிய M/s. Aster–BMS (JV), செகந்திராபாத் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை மாமன்றம் தனது தீர்மான எண். 221 நாள்.30.01.2012 ல் ஏற்றுக்கொள்ள ஒப்புதல் வழங்கியது.

இதன்பேரில் கடந்த 06.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் வழங்கப்பட்டு அக்கடிதம் ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி (Letter of Acceptance) கடந்த 06.02.2012 ல் மேற்படி நிறுவனத்திற்கு 21 நாட்களுக்குள் பணி செயலாக்கத்திற்கான பாதுகாப்பு தொகையினை (Performance Security Deposit) மேற்படி நிறுவனம் குறிப்பிட்ட நாட்களுக்குள் சமர்பிக்காமல், அதன்படி கால நீட்டிப்பு வழங்கப்பட்டும், மேற்படி நிறுவனம் பாதுகாப்பு தொகைக்கு வங்கி உத்திரவாதம் இருந்ததால், ஒப்பந்த விதிகளின்படி, கடந்த 28.09.2011–ல் ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்திய முன்பண வைப்புத்தொகைக்கான வங்கி உத்திரவாத தொகையான ரூ. 4,35,000/– பறிமுதல் செய்யப்பட்டு, மூன்றாம் முறையாக கடந்த 05.07.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கலந்து கொண்ட ஒரே ஒரு நிறுவனம் தொழில் நுட்ப தகுதி பெறாததால் ஒப்பந்தப்புள்ளியை நிராகரிப்பு செய்ய மாநில தொழில் நுட்ப நிலை குழுவால் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் மேற்படி நிறுவனம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு, ஷ பணிக்கு நான்காம் முறையாக 16.11.2012 அன்று E-Tender முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது.

1. திரு. ஜே.எஸ். அசோசியேட்ஸ்– ஆர்.எஸ் டெவலப்மென்ட் & கன்ஸ்ட்ரக்சன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (ஜேவி), கோயம்புத்தூர்.

2. திரு. டிஎ இன்ஃப்ரா புராஜக்ட்ஸ் லிமிடெட், ஹைதராபாத்.

மேற்படி நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வுக்குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில் திரு. ஜே.எஸ். அசோசியேட்ஸ்– ஆர்.எஸ் டெவலப்மென்ட் & கன்ஸ்ட்ரக்சன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (ஜேவி), கோயம்புத்தூர் மட்டும் தொழில்நுட்ப தகுதி பெற்றதால் 06.02.2013 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் (Financial Bid) திறக்கப்பட்டது. அதன் விபரமும், விலைகுறைப்பு விபரமும் பின்வருமாறு:

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | நிறுவனம் வழங்கிய ஒப்பந்த விலைப்புள்ளி விபரம் | நிறுவனம் வழங்கிய விலைகுறைப்பு விபரம் & தே□ | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (கூடுதல்) சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | தி/ள். ஜே.எஸ். அசோசியேட்ஸ்– ஆர்.எஸ் டெவலப்மென்ட் & கன்ஸ்ட்ரக்சன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (ஜேவி), கோயம்புத்தூர் | ரூ. 8,39,83,901.46 | ரூ.11,85,15,958.70 | | 41.12% |
| 2 | | | | முதலாவது விலை குறைப்பிற்கு பின் (08.02.2013) ரூ. 11,,80,00,000 | 40.50% |
| 3 | | | | இரண்டாவது விலை குறைப்பிற்கு பின் (14.02.2013) ரூ.11,75,00,000 | 39.91% |
| 4 | | | | மூன்றாவது விலை குறைப்பிற்கு பின் (18.02.2013) ரூ. 11,66,00,000 | 38.84% |

மேற்படி நிறுவனத்திடமிருந்து மூன்றாவது முறையாக பெறப்பட்ட விலைக்குறைப்புக்கு பின்னர், 19.02.2013–ந் தேதியில் நான்காவது முறையாக விலை குறைப்பு செய்திட மாநகராட்சியால் கோரப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக, இதற்கு மேல் (ரூ. 11,66,00,000) தங்களால், மேலும் விலை குறைப்பு செய்திட இயலாது என மேற்படி நிறுவனம் தனது கடித நாள்: 19.02.2013 மூலமாக தெரிவித்துவிட்ட காரணத்தால், மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்ட இறுதி ஒப்பந்த தொகையினை (ரூ. 11,66,00,000) ஏற்பது குறித்து "மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்" முடிவிற்காக முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணிக்கு தி/ள். ஜே.எஸ். அசோசியேட்ஸ்– ஆர்.எஸ் டெவலப்மென்ட் & கன்ஸ்ட்ரக்சன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (ஜேவி), கோயம்புத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்புத்தொகையான ரூ. 11,66,00,000/– ஐ, 2010–11 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பீடு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 38.84% கூடுதலாக உள்ளது. இருப்பினும், நடப்பாண்டான 2012–13 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டின் விலை விகிதத்தோடு ஒப்பீடு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 14.83% மட்டுமே கூடுதலாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை "மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு'' வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலான விலை விகிதத்தில் வழங்கப்பட்டுள்ள (மதிப்பீட்டிற்கு 38.84% கூடுதல்) மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதால் ஏற்படும் கூடுதல் செலவீனத்தை, மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 7504/09/ஜே.என். 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 396 நாள் 18.03.2013</u>**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ-விற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், நஞ்சுண்டாபுரத்தில் 40 எம்எல்டி கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (சிப்பம்–V) அமைக்கும் பணிக்கு ரூ. 32.22 கோடி ஒப்பந்தபுள்ளி கோரிய மதிப்பில் 27.02.2008 அன்று கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) என்ற நிறுவனம் ரூ. 33.79 கோடிக்கு 4.87% ஒப்பந்த மதிப்பைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்ததை அனுமதித்து, மாமன்றம் தீர்மான எண். 273, நாள்: 27.03.2008–ன் படி அனுமதித்து, பதினெட்டு (18) மாத காலத்திற்குள் பணி முடிக்க, ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு பணி உத்தரவு 05.05.2008 அன்று வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. மேற்கண்ட இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் (இயந்திரங்கள், மின் உபகரணங்கள் மற்றும் Wetwell, Blower Room, Office Building பணிகள்) ரூ. 17.96 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைப்பெற்று வந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள குடியிருப்போரால், நீதிமன்றத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை தடைசெய்ய கோரி வழக்கு தொடரப்பட்டு கடந்த 28.04.2009 முதல் பணி நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது கட்டுமானப்பணிகள் நிறுத்தப்பட்டு 42 மாதங்கள் (28.04.2009 முதல் 25.10.2012 வரை) முடிவடைந்த நிலையில் மேற்படி இடத்தில் பணிகளை தொடர, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சில நிபந்தனைகளுடன் கடந்த 25.10.2012 அன்று கட்டுமானப்பணிக்கான அனுமதியினை (Consent to Establish) வழங்கியுள்ளது. அக்குறிப்பிட்ட நிபந்தனைகள் கீழ்கண்டவாறு:

1. கழிவு நீர் சேகரிக்கும் தொட்டிகள் இரண்டினை (C-Tech Basin) மாற்றி அமைத்தல்.

2. சுத்திகரிப்பு நிலையத்தின் சுற்றுச்சுவரின் உயரத்தை அதிகப்படுத்துதல்.

3. கழிவு நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து வெளிப்படும் துர்நாற்றத்தை குறைக்க கருவி (Odour Mitigation System )அமைத்தல்.

4. மின்னாக்கியின் கொள்ளளவை (Diesel Generator) 750 KVAக்கு பதிலாக 1250KVA க்கு அதிகப்படுத்துதல்.

5. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பை நேரடி ஆய்வு செய்யும் வகையில் கணினி முறையில், நஞ்சுண்டாபுரத்திலிருந்து சென்னையிலுள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இடையே நேரடி தொடர்புக்கு வழிவகை செய்தல்.

மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்து பணியை மீண்டும் துவக்கும் பொருட்டு, புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணியை துவக்கினால் ஏற்படும் காலதாமதம், விலை அதிகரிப்பு (Extra Expenditure) ஆகியவற்றை தவிர்க்க, ஏற்கனவே ஒப்பந்தம் மேற்கொண்டிருந்த நிறுவனமான, திரு. இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை நிறுவனத்தை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) பணியினை மீண்டும் தொடர வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது. நஞ்சுண்டாபுரம் பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் மொத்த தொகையில், ரூ. 17.96 கோடிக்கு பகுதி பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மாநகராட்சி வழங்கிய, பணிக்கான ஒப்பந்தகாலம் முடிவடைந்த நிலையில், ஒப்பந்ததாரர் மீண்டும் DBOT அடிப்படையில் பணிகளை துவங்கவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் நிபந்தனையின் படி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும், ஏற்கனவே ஒப்பந்தப்பணிக்காக நிர்ணயித்த தொகையில் மீதித் தொகையான ரூ. 15.83 கோடியுடன், கீழ்குறிப்பிட்டுள்ளபடி கூடுதல் செலவினம் ஆகும் எனவும் அதனை தரும் பட்சத்தில் பணியினை செய்து தர இயலும் என ஒப்பந்ததார நிறுவனமான திரு. இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை தெரிவித்துள்ளது.

அ) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய நிபந்தனைகளின் படி கூடுதல் மற்றும் புதிய இனங்கள் செய்யப்பட வேண்டி தேவைப்படும் தொகை:

| வ. எ ண் | பணியின் விபரம் | கூடுதல் செலவினம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | கழிவு நீர் சேகரிக்கும் தொட்டிகள் இரண்டினை (C-Tech Basin) மாற்றி அமைத்தல். | 9.65 |
| 2 | சுத்திகரிப்பு நிலையத்தின் சுற்றுச்சுவரின் உயரத்தை அதிகப்படுத்துதல். | 0.83 |
| 3 | கழிவு நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து வெளிப்படும் துர்நாற்றத்தை குறைக்க கருவி (Odour Mitigation System )அமைத்தல். | 1.53 |
| 4 | மின்னாக்கியின் கொள்ளளவை (Diesel Generator) 750 KVAக்கு பதிலாக 1250KVA க்கு அதிகப்படுத்துதல். | 1.68 |
| 5 | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பை நேரடி ஆய்வு செய்யும் வகையில் கணினி, முறையில் நஞ்சுண்டாபுரத்திலிருந்து சென்னையிலுள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இடையே நேரடி தொடர்புக்கு வழிவகை செய்தல். | 0.60 |
| | மொத்தம் | 14.29 |

ஆ) நீதிமன்ற தடையுத்தரவின் பேரில் பணியினை நிறுத்தி வைத்த காரணத்தினால் ஒப்பந்தப்படி செய்ய வேண்டிய பணிகளுக்கு விலையேற்றத்தின் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினம்

| வ.எண் | பணியின் விபரம் | கூடுதல் செலவினம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | கட்டுமானப்பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டு 42 மாத காலம் ஆனதால் அதிகரித்துள்ள கட்டுமானப்பொருட்களுக்கான சந்தை விலையேற்றம் (Price Escalation) | 3.21 |
| 2 | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய அமைவிடத்தில் நாளது வரை உபயோகப்படுத்தாமல் இருந்ததால் பழுதடைந்துள்ள இயந்திரங்களை புதுப்பித்தல் செலவு | 4.37 |
| 3 | வாட் வரி (5%) | 1.09 |
| | மொத்தம் | 8.67 |
| | ஆக மொத்தம் (அ மற்றும் ஆ) | **22.96** |

மேற்படி ஒப்பந்ததாரர் தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை தரப்பில் வைக்கப்பட்ட மேற்படி பணிகளை செய்யும் பொருட்டு மேற்படி கூடுதல் செலவினத் தொகை ரூ. 22.96 கோடியினை வழங்க அனுமதி கோரி மதிப்பீடு (Estimate), நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் ஒப்புதல் பெற கடந்த 17.01.2013 அன்று அனுப்பிவைக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர், தனது 23.01.2013–ந் தேதிய கடிதத்தின் வாயிலாக வழங்கிய அறிவுரையின் படி, தொழில்நுட்ப வல்லுனர்குழுவினை அமைத்து, கலந்தாய்வு கூட்டம் நடத்தி, கூட்டத்தின் முடிவினை மன்றத்தின் ஒப்புதலுடன் அனுப்பி வைக்க கோரப்பட்டது. அதன் பேரில் மேற்படி குழுவின் உறுப்பினர்களாக (Tender Scrutiny Committee / Technical Committee, Coimbatore Corporation) மாநகராட்சி ஆணையர் அவர்களின் 28.01.2013–ந் தேதிய உத்தரவின் பேரில் தொழில்நுட்பக்குழு அமைக்கப்பட்டு, குழு வல்லுநர்களால் கடந்த 01.02.2013 அன்று கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

மேற்படி தொழில்நுட்ப குழுவின் கூட்டத்தில் நஞ்சுண்டாபுரம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வழங்கப்பட்டு பயன்படுத்தாத நிலையில் இருந்த இயந்திரங்களை மீண்டும் இயக்க தேவைப்படும் தொகையாக ஒப்பந்ததாரர் கோரிய ரூ. **4.37** கோடி மற்றும் வாட் வரித்தொகை ரூ. **1.09** கோடி ஆகிய இரண்டு இனங்கள் தவிர்த்த மற்ற செலவினங்கள் ரூ. **17.50** கோடி வழங்க குழு ஒப்புதல் வழங்கியது. மேலும் மேற்படி பணிகள் ஒப்படைக்கப்பட்ட நாள்முதல் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த கால நீட்டிப்பு செய்து தரவும் குழு முடிவு செய்தது.

மேற்கண்ட தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ள நிபந்தனைகளின்படி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஆகும் கூடுதல் செலவினம் ரூ. **17.50** கோடிக்கு குழுவினால் (Tender Scrutiny Committee / Technical Committee, Coimbatore Corporation) ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனவே, இக்கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும், ஒப்பந்தம் உறுதி செய்யும் குழுவிற்கு அனுப்பி அனுமதி பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினை ஏற்கனவே, மேற்கொண்டிருந்த தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை என்ற ஒப்பந்ததார நிறுவனத்திற்கு ஒரு வருட காலம் ஒப்பந்தகால நீட்டிப்பு வழங்க அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ள நிபந்தனைகளின் படி, மேற்படி பணிக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கூடுதல் பணிகளுக்கான, கூடுதல்செலவினம் ரூ. **14.29** கோடி மற்றும் ஏற்கனவே மேற்கொண்ட ஒப்பந்தத்தின்படி, மேற்கொள்ளப்பட வேண்டிய மீதமுள்ள கட்டுமான பணிகளுக்கு விலையேற்றத்தால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ. **3.21** கோடி, ஆக மொத்த செலவினம் ரூ. **17.50** கோடிக்கு ஒப்புதல் வழங்கலாம்.
3. மேற்படி பணிக்காகும் கூடுதல் செலவினத்தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு கட்டலாம்.
4. ஒப்பந்தம் உறுதி செய்யும் குழுவிற்கு அனுப்பி ஒப்புதல் பெற மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண். **4617/2008**/ஜேஎன்4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 397 நாள் 18.03.2013</u>**

அலுவலகக் குறிப்பு 1 முதல் 4 வரை அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - மாதாந்திர வாடகை கடை – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று - ஒப்படை செய்வது - தொடர்பாக. |
| பார்வை | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.208 நாள்.01.03.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட மாதாந்திர வாடகை இனத்திற்கு 30.01.2013-ம் தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண | இனம் | 30.01.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| அ | வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.1 (226.04 சதுரடி) (BASEVALUE ரூ.10,900/-) | 11,700/- (மின் ஏலம்) | திரு.C.ரவிசந்திரன் |

மேற்படி இனத்திற்கு மூன்று முறை (05.10.2012, 08.11.2012 மற்றும் 20.12.2012) ஏலம் நடைபெற்றது. 30.01.2013-அன்று நான்காவது முறை நடைபெற்ற ஏலத்தில் திரு.C.ரவிசந்திரன் என்பவரிடமிருந்து ரூ.11,700/-க்கு மின் ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இது அரசுமதிப்பு ரூ.10,900/-ஐ காட்டிலும் கூடுதலாக பெறப்பட்டுள்ளது. மேலும் பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின்படி ஒரு சதுரடிக்கு ரூ.27.25 என்கின்ற அடிப்படையில் 226.04 சதுரடிக்கு ரூ.6160/-ஐ விட கூடுதலாகவும் உள்ளதால் இவ்வினத்தை ஒப்படை செய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.208 நாள்.01.03.2013-ல் அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 398 நாள் 18.03.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 208 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 6

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம்- ஆவின் பாலகம் வாடகை உயர்வு செய்தல் - தொடர்பு. |
| பார்வை : | வ.வி.ம.நி.கு.எண்.219 நாள் 01.03.2013. |

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட ஆவின் பாலகங்களுக்கு வாடகை உயர்வு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.219, நாள்.01.03.2013-ல் வரிசை எண்.2, 4 மற்றும் 5-ல் உள்ள இனங்களுக்கு ஒப்புதல் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

வரிசை எண்.1, 3 மற்றும் 6-ல் உள்ள இனங்கள் தனியாரால் நடத்தப்படுவதால் மறு ஆய்வு செய்து மீண்டும் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | அமைவிடம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடம் | தற்போது செலுத்தி வரும் வாடகை ரூ. | 01.04.2013முதல் பொதுப் பணித் துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.முகம்மது சலீம்<br>உக்கடம் பேருந்து நிலையம்<br>வார்டு எண். 82, வரி விதிப்பு எண். 8231800 | 01.06.2011 | 3,584 | 01.04.2014 முதல் 4,122 |
| 2 | ஆவின் பாலகம்,<br>உக்கடம் பேருந்து நிலையம்<br>வார்டு எண். 82, 8231230 | 01.04.1995 | 250 | 2,500 |
| 3 | திரு.முகம்மது உபைஸ்<br>உக்கடம் பேருந்து நிலையம்<br>வார்டு எண். 82, வரிவிதிப்பு எண். 8231799 | 01.06.2011 | 3,584 | 01.04.2014 முதல் 4,122 |
| 4 | ஆவின் பாலகம்<br>நேரு ஸ்டேடியம் மருதம் கோ.ஆப்டெக்ஸ் எதிரில், வார்டு எண். 72 | 01.04.2001 | 2,041 | 5,943 |
| 5 | ஆவின் பாலகம்<br>நகர பேருந்து நிலையம்<br>வார்டு எண். 54, வரிவிதிப்பு எண். 5431581 | 01.04.2001 | 2,041 | 7,500 |
| 6 | திரு.காமராஜ், ஆவின் பாலகம்,<br>நகர பேருந்து நிலையம்<br>வார்டு எண். 54, | 01.04.2001 | 2,041 | 7,500 |

அலுவலக குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119/2012/அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 399 நாள் 18.03.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 219 நாள் 01.03.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 7

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி -மத்திய மண்டலம் - வார்டு எண்.83-ல் T.K. மார்க்கெட் மத்தியில் தென் வடல் ரோட்டின் இருபுறமும் தரைக் கடையாக மாற்றி மேற்கண்ட இனத்தை ஏலத்தில் சேர்ப்பது – தொடர்பாக.

பார்வை :

1. மாமன்ற தீர்மான எண். 317 நாள். 24.12.2008
2. ஆணையாளரின் குறிப்பு நாள். 21.02.2013.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 220 நாள்.01.03.2013.

*******

பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி மத்திய மண்டலம் வார்டு எண். 83-ல் உள்ள T.K.மார்கெட் மத்தியில் அமைந்துள்ள ரோட்டின் கிழபுறத்தில் தென்வடலாக உள்ள இடத்தில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2009-2010-ம் ஆண்டு பொது ஏலத்திலிருந்து நீக்கப்பட்டது.

பார்வை (2)-ல் காணும் ஆணையாளரின் குறிப்புரையின்படி 2013-2016 ஆண்டிற்கான பொது ஏலத்தில் T.K. மார்கெட் மத்தியில் தென் வடல் ரோட்டின் இருபுறமும் தரைக் கடையாக மாற்றி மேற்கண்ட இனத்தை ஏலத்தில் சேர்க்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.220 நாள்.01.03.2013-ல் அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.12176/2012/அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 400 நாள் 18.03.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 220 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் - வார்டு எண். 82-ல் உள்ள ஈஸ்வரன் கோயில் உள்ள நடைபாதை கடைகளுக்கு நிலுவை வாடகை மற்றும் வட்டி தொகை செலுத்துவது – தொடர்பாக.

பார்வை :
1. சிறு வியாபாரிகள் சமூக நல சங்கத்தினர் 13.02.2013-ம் தேதிய கடிதம்.
2. மாமன்ற தீர்மான எண். 354 நாள். 31.01.2013
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு திர்மானம் எண்.221 நாள்.01.3.2013.

*******

மத்திய மண்டலம் வார்டு எண். 81-ல் ஈஸ்வரன் கோயில் நடைபாதை கடைகள் மொத்தம் 113 கடைகளில் 68 கடைகளுக்கு கடை உரிம எண் வழங்கப்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள சுமார் 45 கடைகளுக்கு உரிம எண் வழங்கி வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். மேற்படி கடைகளில் மாத வாடகை ரூ.600/- மற்றும் ரூ.874/- செலுத்தி வருகின்றனர்.

பார்வை (2)-ன் படி மாதவாடகை ரூ.600/- வாடகையை ரூ.750/-ஆகவும் ரூ.874/- வாடகையை ரூ.1200 /- ஆகவும் 01.04.2013 முதல் உயர்வு செய்யப்பட்டுள்ளது.

பார்வை (1)-ல் வாடகை நிலுவைத் தொகை முழுவதையும் தவணை முறையில் செலுத்தி விடுவதாகவும் நிலுவைத் தொகைக்கான வட்டியினை ஏழ்மை நிலையினை கருத்தில் கொண்டு ரத்து செய்து தரும்படி கோரியுள்ளனர். மேலும் நிலுவைத் தொகையில் முதல் தவணையாக ஒரு கடைக்கு ரூ.15,000/- வீதம் 40 கடைகளுக்கு ரூ.6,00,000/-யினை (D.D) வங்கி வரைவோலை எடுத்து சமர்ப்பித்துள்ளனர்.

நடைபாதை கடைகள் என்பதாலும், செலுத்த வேண்டிய வாடகைத் தொகையினை காட்டிலும் வட்டித் தொகை அதிகமாக உள்ளதால் வட்டியினை தள்ளுபடி செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.221 நாள்.01.03.2013-ல்

1. தரைக்கடை என்பதால் அபராத வட்டித் தொகை 50% தள்ளுபடி செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.
2. இச்சலுகை 31.03.2013-க்குள் முழுத்தொகையும் செலுத்தும் உரிமதாரர்களுக்கு மட்டும் 50% தள்ளுபடி சலுகை வழங்கவும், உள்வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளின் உரிமதாரர்களுக்கு இச்சலுகை பொருந்தாது எனவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.10119/2012/ அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 401 நாள் 18.03.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 221 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் வார்டு எண்.71 புலிய குளம் ரோட்டிலுள்ள மயான புறம்போக்கு இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டிடம் வாடகை நிர்ணயம் செய்தல்- பொது ஏலம் கோருதல் - தொடர்பாக.

பார்வை :
1. நில அளவையரின் 07.01.2013-ம் தேதிய குறிப்பு.
2. வ.வி.ம.நி.கு.தீ.எண்.194 நாள்.28.01.2013.
3. ஆணையர் (பொ)அவர்களின் 18.02.2013-ம் தேதிய உத்தரவு.
4. வ.வி.ம.நி.கு.தீ.எண்.213 நாள்.01.03.2013

-----------------

பார்வை (1) – ல் காணும் கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் வார்டு எண்.71 புலிய குளம் ரோட்டில் மயான புறம்போக்கு இடத்தில் கீழ்க்கண்டவாறு கட்டிடம் கட்டி கடந்த 35 வருடங்களாக ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

| வ.எண் | கட்டிட அமைப்பு | அளவு | சந்தை மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1. | கண்ணன் அழகு நிலையம் / ACC சீட் சிமெண்ட் / வர்த்தகம் | 9.25’ x 11’ = 102’ | 5161/- |
| 2. | பேப்பர் வேஸ்ட் கடை – ACC சீட் / சிமெண்ட் / வர்த்தகம் | 7.75’ x 10’ = 78’<br>10.75’ x 11.75’ = 126’<br>-------<br>204’<br>--------- | 10, 322/- |

மேற்படி கட்டப்பட்ட கட்டிடத்தின் இடத்திற்கு சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்யவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.213 நாள்.01.03.2013-ல் மாமன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண். 9067/2012 அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 402 நாள் 18.03.2013**

பொருளில் கண்டுள்ள வரிசை எண் 1 மற்றும் 2 ல் குறிப்பிட்டுள்ள கடைகள் கட்டப்பட்டுள்ள கட்டித்திற்கு சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்யவும், பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் வார்டு எண்.81 –ல் வெரைட்டி ஹால் சாலை திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கடை (Ration Shop) கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ள கடையை ஒதுக்கீடு செய்தல் - தொடர்பாக. |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.81 ல் வெரைட்டி ஹால் சாலை திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கடை (Ration Shop) கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடைக்கு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டின்படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பொதுப்பணித்துறை மாதாந்திர வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | கடையின் அமைவிடம் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.81-ல் வெரைட்டி ஹால் சாலை திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி இடத்தில் கட்டப்பட்டுள்ள கடை | 264 | 38/- | 10,032/- |

எனவே மேற்படி அரசாங்க மாத வாடகை மதிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் இயங்கிவரும் ரேசன் கடைக்கு மாத வாடகை ரூ.10,032/-என ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மாண எண்.212 நாள்.01.03.2013-ல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசு நிறுவனம் என்பதால் மாத வாடகை ரூ.7500/- என நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட பரிந்துரையின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - அனுமதிக்கலாம் ந.க.எண். 1399/2013/ அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 403 நாள் 18.03.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 212 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 11

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் - வரவினங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளுக்கு மத்திய கலால் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய சேவை வரியினை செலுத்த அனுமதி வேண்டுவது - தொடர்பாக |
| பார்வை : | 1. ஆணையாளர், மத்திய கலால் துறை அவர்களின் விளக்கம் அளிக்கக் கோரிய அறிக்கை நாள் 17.10.2012<br>2. ஆணையாளர், நகராட்சி நிர்வாகம் அவர்களது கடிதம் ந.க.எண். 9291/2009/ஆர்.2 நாள் 14.11.2012<br>3. சேவை வரி தனியார் ஆலோசகர் அவர்களின் கருத்து நாள் 22.01.13<br>4. வ.வி.நி.கு.தீ.எண்.225 நாள்.01.03.2013. |

பார்வை 1-ல் காணும் கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ கண்டுள்ள வரவினங்களில் வரியில்லா இனங்கள் மற்றும் இதர இனங்களில் 2007-08-ம் ஆண்டு முதல் வசூல் செய்யப்பட்டுள்ள தொகைகளுக்கு சேவை வரி செலுத்தமாறும், மேலும் நாளது வரையில் சேவை வரி செலுத்தப்படாததற்கான விளக்கத்தை அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கணக்கு எண் | இனம் |
|---|---|---|
| 1 | 1025 | விளம்பர கட்டணம் |
| 2 | 1085 | பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் கட்டணம் |
| 3 | 1044(C) | குப்பை அகற்றுதல் |
| 4 | 1022 | மார்கெட் கட்டணம் |
| 5 | 1026 | பேருந்து நிலைய கட்டணம் |
| 6 | 1027 | ஆடு அறுவைமனை கட்டணம் |
| 7 | 1028 | வாகன நிறுத்த கட்டணம் |
| 8 | 1033 | குத்தகைக்கு விடப்படும் காலியிடங்களின் கட்டணம் |
| 9 | 1036 | வணிக வளாக கட்டணம் |
| 10 | 1037 | சமுதாய கூடக்கட்டணம் |
| 11 | 1038 | கட்டிட வாடகை |
| 12 | 1039 | கட்டண கழிப்பிடம் |
| 13 | 1040 | பயணிகள் தங்கும் அறை |

| | | |
|---|---|---|
| 14 | 1042 | பூங்காக்கள் கட்டணம் |
| 15 | 1066 | இதர பிடித்தங்கள் |
| 16 | 1079 | சாலையோர விளம்பர கட்டணம் |
| 17 | 1100 | கேபிள் பதிப்பு கட்டணம் |
| 18 | 1043 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் |
| 19 | 1044 | இதர கட்டணம் |

அ. மேற்குறிப்பிட்டுள்ள 19 இனங்களில் கீழ் குறிப்பிட்டுள்ள வரவினங்களுக்கு 2007 -2008 முதல் 2011-12 வரையில் தொகை ஏதும் வசூலிக்கப்படவில்லை.

| வ.எண் | கணக்கு எண் | இனம் |
|---|---|---|
| 1 | 1026 | பேருந்து நிலைய கட்டணம் |
| 2 | 1027 | ஆடு அறுவைமனை கட்டணம் |
| 3 | 1028 | வாகன நிறுத்த கட்டணம் |
| 4 | 1036 | வணிக வளாக கட்டணம் |
| 5 | 1038 | கட்டிட வாடகை |
| 6 | 1040 | பயணிகள் தங்கும் அறை |
| 7 | 1079 | சாலையோர விளம்பர கட்டணம் |

ஆ. சேவை வரி செலுத்த தேவையில்லாத இனங்கள் -

(1) 1066 - இதர பிடித்தங்கள் (இவ்வினத்தில் பணியாளர்களுக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ள ஊதியம் திரும்ப செலுத்தப்பட்டுள்ளது)

(2) 1044 - இதர கட்டணம் (சான்றிதழ் மற்றும் சொத்துவரி புத்தக நகல் போன்ற கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டுள்ளன.)

இ. சேவை வரி செலுத்தப்பட்டுள்ள இனம் -

(1) 1037 - சமுதாய கூடக் கட்டணம்
(2) 1033 - மைதானம் கட்டணம்

ஈ. சேவை வரி செலுத்தப்பட வேண்டிய இனங்கள் -

| வ.எண் | கணக்கு எண் | இனம் | 2007-08 முதல் 2011-12 வரை வசூலிக்கப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|
| 1 | 1085 | பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் கட்டணம் | 40,400 |
| 2 | 1022 | மார்கெட் கட்டணம் | - |
| 3 | 1033 | குத்தகைக்கு விடப்படும் காலியிடங்களின் கட்டணம் | - |
| 4 | 1025 | விளம்பர கட்டணம் | 1,02,897 |
| 5 | 1036 | வணிக வளாக கட்டணம் | 47,267 |
| 6 | 1039 | கட்டண கழிப்பிடம் | 10,26,598 |
| 7 | 1043 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் | 51,35,130 |
| 8 | 1042 | பூங்காக்கள் கட்டணம் | - |
| 9 | 1045-7 | குப்பை அகற்றுதல் கட்டணம் | 92,23,440 |
| | | மொத்தம் | 1,55,75,732 |

உ. வரியில்லா இனங்களில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகள்

| வ.எண் | வரி வசூலிக்கப்பட்ட ஆண்டு | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2007-08 | 1,65,25,953.40 |
| 2 | 2008-09 | 1,30,52,925.50 |
| 3 | 2009-10 | 1,63,91,463.00 |
| 4 | 2010-11 | 3,36,20,087.70 |
| 5 | 2011-12 | 5,32,13,752.50 |
| | மொத்தம் | 13,28,04,182.10 |
| 6 | அரசு கட்டிடங்கள் | 2,77,05,222.00(-) |
| | நிகர தொகை | 10,50,98,960.10 |

1. மேற்குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மண்டலத்தில் வசூலிக்கப்பட்டுள்ள தொகைகளில் சேவை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு பெறக்கூடிய இனங்களை கண்டறிந்து அறிக்கை அளிக்க சேவை வரி தனியார் ஆலோசகர் ( Consultant ) அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.
2. சேவை வரி தனியார் ஆலோசகர் ( Consultant ) தனது 22.01.2012-ம் தேதிய கடிதத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு மட்டும் சேவை வரி செலுத்தப்பட வேண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.
    1. வணிக வளாக கட்டிடங்கள் மற்றும் மீன் மார்க்கெட் கடைகள்
    2. பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்ய அளிக்கும் உரிமம்.

எனவே சேவை வரி தனியார் ஆலோசகர் (Consultant) அவர்களின் குறிப்பின் படி மத்திய மண்டலத்தில் வணிக வளாக கடைகள் மூலம் 2007-2008-ம் ஆண்டு முதல் கணிணி பதிவேடுகளின் படி வசூலிக்கப்பட்ட கீழ் குறிப்பிட்ட தொகைகளுக்கான சேவை வரியினை செலுத்தவும், மேலும் நகராட்சி நிர்வாக இயக்குனரது கடிதத்தில் தெரிவித்துள்ளபடி வணிக வளாக கடைகளின் உரிமைதாரர்களுக்கு சேவை வரி நிலுவை தொகைகளை செலுத்துமாறு தனித்தனி அறிவிப்பு வழங்கி இத்தொகையினை வசூல் செய்யவும் கணினியில் வசூலிக்கப்பட்ட விபரத்தினை சரிபார்த்து பின்னர் சேவை வரி செலுத்த அனுமதி வழங்குவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.225 நாள்.01.03.2013-ல் அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 6807/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 404 நாள் 18.03.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 225 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - குத்தகை இனங்கள் 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை ஒப்படைக்க – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியுடன் உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று - ஒப்படை செய்தல் - தொடர்பாக.

பார்வை வ.வி.ம.நி.கு.எண்.224 நாள் 01.03.2013.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2013 முதல் 31.03.2016 வரையிலான ஆண்டிற்கு 27.12.2012, 23.01.2013, 13.02.2013 மற்றும் 28.02.2013 ஆகிய நாட்களில் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. 28.02.2012 அன்று நடைபெற்ற பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழக்கண்ட இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 13.02.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 28.02.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நவீண கட்டண கழிப்பிடம் தியாகி குமரன் மார்க்கெட் நிர்ணயம் செய்த அரசு மதீப்பீடு ரூ 8,01,555/- | திரு. எம்.ஜெயப்பிரகாஷ் | ரூ.8,01,555/- (ஒப்பந்தப் புள்ளி) | ரூ. 8,01,755/- (மின் ஏலம்) - |
| 2 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் இரண்டு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் நிர்ணயம் செய்த அரசு மதீப்பீடு ரூ 12,96,000/- | திரு. எம்.ஹரிகிருஷ்ணன் | ரூ.12,96,000/- (ஒப்பந்தப் புள்ளி) - | ரூ. 13,22,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 3. | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நவீண கட்டண கழிப்பிடம் தளம்.1, தளம்.2,தளம்.3 மற்றும் தளம்.4 நிர்ணயம் செய்த அரசு மதீப்பீடு ரூ.15,98,600/- | திரு. என்.ரகோத்தமன் | ரூ.15,98,600/- (ஒப்பந்தப் புள்ளி) | ரூ.16,31,000/- (மின் ஏலம்) |
| 4. | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் (B-3) காவல் நிலையம் அருகில்) நிர்ணயம் செய்த அரசு மதிப்பீடு ரூ.16,75,000/- | திரு.சி.செல்வம் | ரூ.16,75,000/- (ஒப்பந்தப் புள்ளி) | ரூ.17,10,000/- (மின் ஏலம்) |

மேற்படி குத்தகை இனத்தில் வரிசை எண். 1-ல் திரு.எம்.ஜெயப்பிரகாஷ், வரிசை எண்.2-ல் திரு.எம்.ஹரிகிருஷ்ணன் மற்றும் வரிசை எண். 3-ல் திரு.என்.ரகோத்தமன், வரிசை எண். 4-ல் திரு.சி.செல்வம், ஆகியவர்களிடமிருந்து அரசு நிர்ணயம் செய்த மதிப்பீட்டை காட்டிலும் கூடுதலாக ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி இனங்களின் உயர்ந்தப்பட்ச ஏல கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.224 நாள்.01.03.2013–ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 405 நாள் 18.03.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 224 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் 2013-2014-ம் ஆண்டிற்கு சம்மதக் கடிதம் வழங்கிய குத்தகைதாரர்களுக்கு 5% மற்றும் 10% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - புதுப்பிக்க சம்மதக் கடிதம் வழங்கப்படாத இனங்கள் - மூன்றாண்டு முடிவடைந்த இனங்களுக்கு பொது ஏலம் கோருதல் - அனுமதி வேண்டுவது தொடர்பாக |
| பார்வை | 1. அரசாணை எண்.78 நாள்.25.5.2009<br>2. துணை ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.17.01.2013<br>3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.207 நாள்.01.03.2013. |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு பார்வையில் காணும் அரசாணையின் படி 2012-2013-ல் வழங்கப்பட்ட உரிமைத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2013-2014-ம் ஆண்டிற்கான குத்தகைத் தொகையாக நிர்ணயம் செய்யவும், புதுப்பிக்க சம்மதக் கடிதம் வழங்கப்படாத இனங்களுக்கும் மற்றும் மூன்றாண்டு முடிவடைந்த இனங்களுக்கும் பொது ஏலம் கோரும் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) 2012-2013-ல் வழங்கப்பட்ட உரிமத்தொகையில் 5சதவீதம் உயர்வு செய்து 2013-2014-ம் ஆண்டிற்கான குத்தகை புதுப்பிக்க சம்மத கடிதம் பெறப்பட்ட இனங்கள்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | குத்தகை இனம் | குத்தகை காலம் | 2012-2013-ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. | 2013-2014-ம் ஆண்டு குத்தகை தொகை(5% உயர்வுக்குப் பின்) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.சி.ஆர்.வினாயகம் | சிவானந்தாகாலனி நவீன கட்டணக் கழிப்பிடம் | 2011-2014 | 38,325 | 40,245 |
| 2 | திரு.N.செந்தில்குமார் | ஆம்னி பேருந்து நிலையத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2012-2015 | 10,50,000 | 11,02,500 |
| 3 | திரு.A.வெங்கடேஷ் | சக்தி ரோடு நவீன கட்டண கழிப்பிடம் | 2011-2014 | 4,24,250 | 4,45,463 |
| 4 | திரு.எம். ஹரி கிருஷ்ணன், | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2011-2014 | 13,66,050 | 14,34,355 |
| 5 | திரு.S.வேலுச்சாமி | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் | 2011-2014 | 9,16,650 | 9,62,485 |
| 6 | திரு.K.முனியான்டி | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (ஆர்.வி.ஹோட்டல் எதிரில்) கட்டண கழிப்பிடம் | 2012-2015 | 6,11,100 | 6,41,655 |
| 7 | திரு.A.வெங்கடேஷ் | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூக்கும் உரிமம் | 2011-2014 | 19,32,000 | 20,28,600 |
| 8 | திரு.P.செந்தில்குமார் | வ.உ.சி பூங்கா சிறுவர் விளையாடும் இடம் | 2012-2015 | 22,32,700 | 23,44,335 |
| 9 | திரு.S.கிருஷ்ணன் | வ.உ.சிபூங்கா சிறுவர் இரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2011-2014 | 2,26,800 | 2,38,140 |
| 10 | திரு.P.A.உசேன் | அவிநாசி ரோடு பாஸ்போர்ட் அலுவலகம் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2012-2015 | 51,000 | 53,550 |
| 11 | திரு.p.முகமது ரபீக் | தியாகி குமரன் மார்க்கெட் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2011-2014 | 15,85,500 | 16,64,775 |
| 12 | திரு.S.கனகராஜ் | குரு ஹோட்டல் நான்கு சக்கர வாகன நிறுத்தும் இடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2011-2014 | 9,57,600 | 10,05,480 |
| 13 | திரு.A.வெங்கடேஷ் | ரேஸ்கோர்ஸ் கட்டணக் கழிப்பிடம் | 2011-2014 | 16,800 | 17,640 |
| 14 | திரு.S.வேலுச்சாமி, | சீனிவாசபுரம் கட்டணக கழிப்பிடம் | 2012-2015 | 2,25,000 | 2,36,250 |
| 15 | உதயம் மகளிர் சுய உதவிக் குழு | சிவானந்தாகாலனி அறிவியல் பூங்கா | 2012-2015 | 36,000 | 37,800 |
| 16 | திரு.இரா.செந்தில்வேல் | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள இரவு தங்கும் விடுதி | 2012-2015 | 26,76,000 | 28,09,800 |

(ஆ)

2012-2013-ல் வழங்கப்பட்ட உரிமத்தொகையில் 10 சதவீதம் உயர்வு செய்து 2013-2014-ம் ஆண்டிற்கான குத்தகை புதுப்பிக்க சம்மத கடிதம் பெறப்பட்ட இனங்கள்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | குத்தகை இனம் | குத்தகை காலம் | 2012-2013-ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. | 2013-2014-ம் ஆண்டு குத்தகை தொகை(10% உயர்வுக்குப் பின்) ரூ. |
|---|---|---|---|---|---|
| 17 | திரு.T.ராகவலிங்கம் | சீனிவாசபுரம் கல்யாண மண்டபம் | 2011-2014 | 5,22,500 | 5,74,750 |

(இ)

2012-2013-ல் வழங்கப்பட்ட உரிமத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2013-2014-ம் ஆண்டிற்கான குத்தகையினை நடத்த இயலாமல் திரும்ப ஒப்படைத்த இனங்கள்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | குத்தகை இனம் | குத்தகை காலம் | 2012-2013-ம் ஆண்டிற்கான குத்தகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 18 | திரு.மு ஜனார்த்தனன் | சீனிவாசபுரம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2012-2015 | 30,02,000 |
| 19 | திரு.ஏ.மணிவண்ணன் | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சிப் பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | 2011-2014 | 3,79,049 |
| 20 | திரு.M.A..கலீல் ரஹமான் | உக்கடம் புதிய மீன் மார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் மற்றும் இரண்டு ம்றறும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2012-2015 | 7,00,000 |

(ஈ)

2012-2013-ம் ஆண்டில் மூன்று ஆண்டுகள் முடிவடைந்ததால் 2013-2016- ம் ஆண்டிற்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் சேர்க்கப்பட்ட குத்தகை இனங்கள்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | குத்தகை இனம் |
|---|---|---|
| 21 | திரு.எம்.ஹரி கிருஷ்ணன் | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் இரண்டு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் |
| 22 | திரு.N.ரகோத்தமன் | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் தளம் எண்.1, தளம் எண்.2, தளம் எண்.3 மற்றும் தளம் எண்.4 |
| 23 | திரு.C..செல்வம் | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் (B-3 காவல் நிலையம் அருகில்) |

மேற்குறிப்பிட்டுள்ள குத்தகையினங்களில்

(அ) மற்றும் (ஆ) வரிசையில் உள்ள 1முதல் 17 வரை உள்ள இனங்களுக்கு 2013-2014-ம் ஆண்டிற்கான உரிமம் புதுப்பித்து வழங்கவும்

(இ) வரிசையிலுள்ள 18 முதல் 20 வரை உள்ள இனத்திற்கு தொடர்ந்து நடத்த சம்மதம் கடிதம் வழங்காததால் இவ்வினத்திற்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகை பறிமுதல் செய்யவும் 2013-2016-ம் ஆண்டிற்கு பொது ஏலம், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு பின்னேற்பு அனுமதியும்

(ஈ) வரிசையிலுள்ள 21முதல் 23 வரை 2012-2013-ம் ஆண்டில் மூன்று ஆண்டுகள் முடிவடைந்ததால் 2013-2016- ம் ஆண்டிற்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் சேர்க்கப்பட்ட குத்தகை இனங்களுக்கு ஏலம் கோருவதற்கு பின்னேற்பு அனுமதியும் விளம்பர செலவின தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யவும், ஏலம் எடுத்த குத்தகைதாரர்கள் ஏலத்தொகையுடன் ஏலத் தொகையில் 12.36சதவீதம் சேவை வரி, வருமான வரி மற்றும் மத்திய மாநில அரசுகள் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் வரிகளையும் சேர்த்து செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.207 நாள்.01.03.2013-ல் அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 406 நாள் 18.03.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 207 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் குத்தகை இனங்கள் 01.04.2013 முதல் 31.03.2016-ம் ஆண்டு வரை ஒப்படைக்க – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று - ஒப்படை செய்வது - தொடர்பாக. |
| பார்வை | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.209 நாள்.01.03.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2013 முதல் 31.03.2016 வரையிலான ஆண்டிற்கு 27.12.2012, 23.01.2013, 13.02.2013 மற்றும் 28.02.2013 ஆகிய நாட்களில் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. 28.02.2012 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழக்கண்ட இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 23.01.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 13.02.2013-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | சக்தி ரோடு ஆடு மாடு அறுவைமனை<br>நிர்ணயம் செய்த அரசு மதீப்பீடு ரூ 3,63,600/- | 1.திரு.A.அஸ்கர் அலி<br>2.திரு.M.சல்மான் | ரூ. 5,55,555/- (ஒப்பந்தப் புள்ளி)<br>ரூ. 5,55,555/- (மின் ஏலம்) | ரூ.6,69,995/- (மின் ஏலம்)<br>- |
| 2 | நவீன கட்டணக்கழிப்பிடம் வ.உ.சி.பூங்கா<br>நிர்ணயம் செய்த அரசு மதீப்பீடு ரூ3,41,500/- | திரு.K.கோபால்சாமி | ரூ. 3,50,000/- (ஒப்பந்தப் புள்ளி)<br>- | ரூ.3,99,750/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 3. | நவீன கட்டண கழிப்பிடம் உக்கடம் பேருந்து நிலையம்<br>நிர்ணயம் செய்த அரசு மதீப்பீடு ரூ.10,41,900/- | திரு.எம்.ஏ.சபேர் அலி | -------- | ரூ.11,75,000,- (மின் ஏலம்) |

மேற்படி குத்தகை இனத்தில் வரிசை எண். 1-ல் திரு.எ.அஸ்கர் அலி, வரிசை எண்.2-ல் திரு.கே.கோபால்சாமி மற்றும் வரிசை எண். 3-ல் திரு.எம்.ஏ.சபேர் அலி, ஆகியவர்களிடமிருந்து அரசு நிர்ணயம் செய்த மதிப்பீட்டை காட்டிலும் கூடுதலாக ஏல கோரிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி இனங்களின் உயர்ந்தப்பட்ச ஏலக் கோரிக்கை ஏற்று ஒப்படை செய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.209 நாள்.01.03.2013-ல் அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11130/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 407 நாள் 18.03.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 209 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2013-2016 ம் ஆண்டுக்கான இனம் ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக |
| பார்வை | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 211 நாள்.01.03.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு **2013-2016** ஆண்டுக்கான மறு பொது ஏலம்/மின் ஏலம் **13.02.2013** அன்று நடை பெற்றது. இதில் கீழ்க்கண்ட குத்தகை இனத்திற்கு அதன் எதிரே கண்டுள்ளவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ. எண் | இனம் | அரசாங்க மதிப்பு | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் உயர்ந்தப்பட்ட ஏலத்தொகை | மின் ஏலம் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | நவீன கட்டண கழிப்பிடம் செட்டி வீதி | 2,80,000/– | ஆர். கல்பனா | 2,91,500/–<br>2,70,000/– | –<br>– |

இவ்வினத்திற்கு திருமதி கல்பனா என்பவர் அரசாங்க மதிப்பைக் காட்டிலும் உயர்ந்தபட்ச தொகையாக ரூ. **2,91,500/–**க்கு ஏலம் கோரியுள்ளார். இது அரசாங்க மதிப்பான ரூ, **2,80,000/–**க்கு அதிகமாக ரூ. **11,500/–** ஆக உள்ளது. எனவே திருமதி கல்பனா என்பவருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம். ந.க.எண். **698/2012/பி6**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 408 நாள் 18.03.2013**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 211 நாள் 01.03.2013ன்படி, திருமதி கல்பனா என்பவருக்கு 2013-2016 ஆண்டுகளுக்கு ஏலஇனத்தை ஒப்படைப்பு செய்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

| | |
|---|---|
| பார்வை | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 217 நாள்.01.03.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட துடியலூர் வணிக வளாகத்தில் கடை எண் 31 மற்றும் 44 ஆகிய கடைகளை ஒதுக்கீடு பெற்றுள்ள உரிமதாரர்கள் மேற்படி கடைகளின் உரிமங்களை 2.1.2013-ல் மாநகராட்சி வசம் ஒப்படை செய்யப்பட்டதை தொடர்ந்து இக்கடைகளுக்கான உரிமத்திற்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ள 31.01.2013ம் தேதியில் நடைபெற்றது.

இதில் கடை எண் 31க்கு மட்டும் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ஏலம் கோரப்பட்டது. இக்கடைக்கு முதல் முறை ஏலம் விடப்பட்டுள்ளதால் மறு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 21.02.2013ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 31க்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலத் தொகை பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | அரசு மதிப்பு | ஏலத் தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி.சந்தனாலட்சுமி | ரூ.5,150/- | ரூ.5,200/- |
| 2 | திரு.ஜெ.சம்பத்குமார் | ரூ.5,150/- | ரூ.5,260/- |

எனவே மேற்படி மின்ஏலத்தில் திரு.ஜெ.சம்பத்குமார் என்பவர் உயர்ந்தபட்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.5260/-க்கு ஏலம் கோரியுள்ளார். இத்தொகை அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக உள்ளது.

மேற்படி ஏலக் கோரிக்கையை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. பார்வையில் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தில் இப்பொருளினை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 0047/2013/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 409 நாள் 18.03.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 217 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2013-2016ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.02.2013ம் தேதியன்று நடைபெற்றது.

| வ.எண். | இனங்கள் |
|---|---|
| 1. | காந்திபார்க் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |

வரிசை எண்.1ல் கண்ட காந்திபார்க் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமையாணைக்கு கீழ்க் காணும் ஏலதாரர்கள் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர்.

| ஏலதாரர் பெயர் | அரசு மதிப்புத் தொகை | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | அதிகபட்சத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| திரு.எம்.அன்புராஜ் | 3,38,027- | - | 3,40,000- | - |
| திரு.ஜெ.ஜெபமாலைராஜ் | | - | 3,42,000- | 3,42,000- |

மேற்காணும் இனத்திற்கு அரசு மதிப்புத் தொகையாக ரூ.3,38,027- நிர்ணயம் செய்யப்பட்டது. திரு.ஜெ.ஜெபமாலைராஜ் என்பவர் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.3,42,000-க்கு கோரியுள்ளார். இத்தொகை அரசு மதிப்புத் தொகையை விட கூடுதலாக உள்ளது.

எனவே வரிசை எண்.1-ல் கண்ட இனத்திற்கு திரு.ஜெ.ஜெபமாலைராஜ் என்பவர் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதன் பேரிலும் ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.205 நாள்.1.3.2013ன்படி அலுவலகக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.12794/2012/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 410 நாள் 18.03.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 205 நாள் 01.03.2013ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.24 - ரங்கே கவுடர்வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடை எண்.29 மற்றும் 32-க்கு ஒருவருட வாடகை முன்பணத்தொகை காசோலையாக செலுத்தியதில் வங்கியில் தொகையில்லாமல் வங்கியிலிருந்து திரும்ப வரப்பெற்றது – காசோலைக்கு பதிலாக தொகை செலுத்தாததால் கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டது - இக்கடைகளின் வைப்புத்தொகை பறிமுதல் செய்து மறுஏலத்திற்கு கொண்டுவருவது – தொடர்பாக.

பார்வை - ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.26.2.2013.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.24, ரங்கே கவுடர்வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடை எண். 29 மற்றும் 32-க்கு 20.11.2011-ல் நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டு திரு.சின்னதுரை என்பவர் மாதவாடகை ரூ.21,000/-க்கு மாமன்ற தீர்மான எண்.210 / 29.10.2011-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி கடைகளுக்கு ஒருவருட வாடகை தொகை செலுத்துமாறு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் மேற்படி குத்தகைதாரர் காசோலை வழங்கப்பட்டதில் வங்கியில் தொகை இல்லை என திரும்ப வரபெற்றது. மீண்டும் தொகை செலுத்துமாறு பலமுறை அறிவிப்பு அனுப்பப்பட்டும் தொகை செலுத்தாததால், கடைகள் 29.11.2012-ல் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

எனவே கடை எண்.29 & 32-ஐ மறு ஏலத்திற்கு கொண்டு வரவும், மேற்படி கடைகளின் ஏலதாரர் திரு.சின்னத்துரை செலுத்தியுள்ள வைப்புத்தொகையை பறிமுதல் செய்யவும், உரிமதாரரை கருப்புபட்டியலில் சேர்க்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.226 நாள்.1.3.2013-ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :_அனுமதிக்கலாம் ந.க.எண்.9451/2009/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 411 நாள் 18.03.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 226 நாள் 01.03.2013ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் 2013-16-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 26.12.2012 மற்றும் 23.1.2013, 30.1.2013-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடர்பாக. |
| பார்வை | 1.. ஏற்கனவே நடைபெற்ற மின்ஏல நாட்கள் 26.12.2012 & 23.1.2013<br>2. மூன்றாவது பொது ஏலம் நாள்.30.01.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2013-2016 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே 2 முறை 26.12.2012, 23.1.2013 தேதி ஏலம் நடைபெற்றது இவ்வினங்களை 30.1.2013-ம் தேதியன்று மீண்டும் 3-வது முறையாக பொது மின் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு ஆகும்.

3-வது முறையாக ஏலம் நடைபெற்ற தேதி – 30.1.2013

| வ. எண் | குத்தகை இனங்கள் | கடந்த வருட ஏலத் தொகை யில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | 30.1.2013 அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டவர் பெயர் | 30.1.2013 மின் ஏலக் கேள்வி தொகை | 30.1.2013 அன்று நடை பெற்ற ஒப்பந்தப் புள்ளி தொகை | 30.1.2013 உயர்ந்த பட்ச மின்ஏலக் கேள்வி தொகை / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மருதமலை அடிவாரம் பகுதியில் 160 சதுரடி அளவுள்ள கடைகள் கடை எண்.6 | 6400 | சுஜாதா பிலிப் | 7500 | 7400 | 7500 |

வரிசை எண். 1-ல் உள்ள மருதமலை அடிவாரம் பகுதியில் 160 சதுரடி அளவுள்ள கடை எண். 6-ற்கு 8.11.2012, 20.11.2012, 30.1.2013 மூன்று முறை ஏலம் நடத்தப்பட்டதில் இவ்வினத்திற்கு ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு உயர்ந்தபட்ச மின்ஏலத்தொகையாக ரூ.7500-க்கு திரு.சுஜாதா பிலிஃப் என்பவர் கோரியுள்ளார். மேற்படியாருக்கு கடை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.206 நாள்.1.3.2013.படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.12794/2012/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 412 நாள் 18.03.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 206 நாள் 01.03.2013ன் ஒப்புதலை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்கள் 2013-2016 ம் ஆண்டிற்கு உரிமம் ஒப்படைக்க 13.02.2013ம் தேதியன்று பொதுஏலம் ஒப்புந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் நடைபெற்றதில் அதில் கீழ்க்காணுமாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் பெறப்பட்டது.

இனம் - சௌரிபாளையம் ஆடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மின் ஏலம் கேள்வித் தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | திரு. திருநாவுக்கரசு | 3,15,000 | 3,34,000 |
| 2. | திரு. எ. சந்திரன் | … | … |

மேற்படி குத்தகை இனத்திற்கு அரசு மதிப்புத் தொகையாக ரூபாய் 3,13,500/- நிர்ணயம் செய்யப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.திருநாவுக்கரசு என்பவா் அதிகபட்ச மின்ஏலம் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.3,34,000/-க்கு கோரியுள்ளார். மேலும் திரு.எ.சந்திரன் என்பவர் ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலத்தொகை கோரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயித்த ஏலத் தொகையைவிட அதிகபட்சமாக மின்ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோரிய திரு. திருநாவுக்கரசு என்பவருக்கு ஒப்படைப்பு செய்வது தொடா்பாக வரிவிதிப்பு நிதிக்குழுவின் தீர்மான எண். 210 நாள். 01.03.2013-ன்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 14902/2012/கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 413 நாள் 18.03.2013</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 210 நாள் 01.03.2013ன்படி, திருநாவுக்கரசு என்பவருக்கு ஏலஇனத்தை ஒப்படைப்பு செய்ய அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பியூன்ஸ் காலனி மற்றும் மேட்டுப்பாளையம் ரோடு வரை புதிய குடிநீர் பிரதான பகிர்மான குழாய்கள் அமைத்தல் –ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின்அனுமதி வேண்டுதல்– தொடர்பாக. |

-----------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட அபிவிருத்தி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. எனவே, இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 19/12/2012 பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தப்–புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4938/2012/ எம்.டி.1 | வார்டு எண்.9 பியூன்ஸ் காலனி மற்றும் மேட்டுப்பாளையம் ரோடு வரை புதிய குடிநீர் பிரதான பகிர்மான குழாய்கள் அமைத்தல் | 9.77 | 03/12/2012 மூன்றாம் அழைப்பு | தி/ள்என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.88% அதிகம் | தி/ள்என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.88% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

வரிசை எண்.1ல் உள்ள பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4938/2012/எம்.டி.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 414 நாள் 18.03.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி– மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 50-ல் இராஜு சாலை தென்புறத்தில் கடைகள் கட்டுதல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் -தொடர்பாக |

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட அபிவிருத்தி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. எனவே, இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 14/02/2013 பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 135/2013/ எம்.டி.4 | வார்டு எண்.50ல் இராஜு சாலை தென்புறத்தில் கடைகள் கட்டுதல் | 25.65 | 11/02/2013முதல் அழைப்பு | 1.திரு. ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் 8.75% அதிகம்<br><br>2.திருமதி. சி. பாப்பாத்தி, கோயம்புத்தூர் 9.38% அதிகம் | திரு. ஆர்.செல்வராஜ், கோயம்புத்தூர் 4.95% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

வரிசை எண்.1ல் உள்ள பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.135/2013/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 415 நாள் 18.03.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண் 23

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – திட்டசாலை அமைக்கும் பணிகளை விரைந்து மேற்கொள்ள Transfer of Development Rights என்ற சட்டத்தை கோயபுத்தூர் மாநகராட்சி சட்டம் 1981ல் கூடுதல் விதிகளாக சேர்க்க அரசினை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்பித்தல் – தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பல இடங்களில் திட்ட சாலை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு கடந்த ஒரு வருடத்தில் சுமார் 10 சாலைகள் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, அதற்காக நில ஆர்ஜிதம் மேற்கொள்ளவும் நிதி உதவி கேட்டு மாவட்ட ஆட்சிதலைவருக்கும், உள்ளூர் திட்டக் குழுமத்திற்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் இந்த நகரத்திற்கு போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கு திட்ட சாலை அமைக்கும் பணி அத்தியாவசியமாக உள்ளது. நில ஆர்ஜிதம் அதற்கான நிதி ஒதுக்கீடு ஆகிய நடைமுறைகளால் திட்ட சாலை அமைக்கும் பணி காலதாமதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால் சென்னை மாநகராட்சியில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் நில ஆர்ஜிதம் சாலை அபிவிருத்தி திட்டசாலை அமைத்தல் ஆகிய பணிகள் விரைவில் அமைத்திட நில உரிமையாளர்களுக்கு Transfer of Development Rights என்ற சட்டத்தை கொண்டு வந்து அதன் மூலம் சாலைக்காக எடுக்கப்படும் இடத்தினை தானமாக பெற்று அதற்கு ஈடாக Transfer of Development Certificate முறையை பயன்படுத்தி சாலை அமைக்கும் பணி விரைவில் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் நில உரிமையாளர்களுக்கு தேவையான இழப்பீட்டு தொகையை மேற்படி சான்றிதழை விற்பனை செய்து பெற்றுக் கொள்ள வழிவகை உள்ளது. அதன் மூலம் 0.50 FSI கூடுதல் கட்டிடம் கட்ட அனுமதி பெற வழிவகை உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பல சாலைகள் விஸ்தரிப்பு, இணைப்பு சாலைகள் விரைவில் அமைக்க வழிவகை உள்ளது. எனவே இதே நடைமுறையை கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981-ல் கூடுதல் விதிகளாக சேர்த்து இத்திட்டத்தை நடைமுறைபடுத்த அரசினை கேட்டுக்கொள்ள நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் தீர்மானம் எண்.6, நாள். 15.03.2013-ன் படி, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். /2013/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 416 நாள் 18.03.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 24**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - நகரமைப்பு பிரிவு- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இருந்து நேரு விளையாட்டு அரங்கத்தினை சுற்றியுள்ள கடைகளை மட்டும் மாநகராட்சி வசம் எடுத்து மாநகராட்சி சட்ட விதிகளின்படி வாடகைக்கு விடவும் அரசின் அனுமதி கோர மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

******

வ.உ.சி. பூங்கா இடம் 46.26 ஏக்கர் பரப்பளவு இடத்தினை அரசாணை எண்.5850 பொது சுகாதார துறை நாள்.12.12.1940 ன்படி கோயம்புத்தூர் நகராட்சிக்கு மாற்றப்பட்டுள்ளது. பூங்கா இடம் நகரளவை ஆவணத்தின்படி நகரளவை எண்.923/1 – 11.9942 ஹெக்டேர் நிலமாக சாலை, பூங்கா, விளையாட்டரங்கம், அங்காடி, மிருக காட்சி சாலையாக ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி பேரில் பதிவாகி உள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| நகரளவு எண் | 923/2 | 0.0931 | பூங்கா | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| நகரளவு எண் | 923/3 | 2.4400 | மைதானம் | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| நகரளவு எண் | 923/4 | 0.6271 | காலியிடம் | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| நகரளவு எண் | 923/5 | 0.0880 | சாலை | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| நகரளவு எண் | 924 | 3.1000 | பூங்கா கட்டிடம் | கோயம்புத்தூர் மாநகராட்சி |

என நகரளவை ஆவணத்தில் தாக்கலாகி உள்ளது. கோயம்புத்தூர் நகராட்சியாக இருந்த காலத்தில் 1970 ம் வருடம் வ.உ.சி. பூங்கா இடத்தில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு மாவட்ட விளையாட்டு மன்றத்திற்கு 99 வருட குத்தகைக்கு வருட குத்தகை தொகையாக ரூ.400 நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், வ.உ.சி. பூங்காவில் உள்ள நகரளவை எண்.923/1A, 924ல் உள்ள 21 ஏக்கர் 6 சென்ட் இடத்தினை மாவட்ட விளையாட்டு மன்றத்திற்கு அரசின் அனுமதி பெற்று கொடுக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரு தீர்மானத்திலும் விளையாட்டரங்கம் கட்ட மட்டும் 6.23 ஏக்கர் மாவட்ட விளையாட்டு மன்றம் எடுத்துள்ளது. கூடுதலாக கேட்கப்பட்டுள்ள 21.06 ஏக்கர் இடம் மாநாகராட்சி வசமே உள்ளது. இந்நிலையில் 6.23 ஏக்கர் இடத்தில் அரசின் நிதி உதவி ரூ.25.00 லட்சம் பெற்று விளையாட்டரங்கம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு கோயம்புத்தூர் நகராட்சி சார்பாக ரூ.5.00 லட்சம் நன்கொடையும் ரூ.9.00 லட்சம் 8% வட்டி விகிதத்தில் கடனாகவும், ரூ.2.40 லட்சம் வெள்ள ஒளி அமைத்தும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 31.10.1985 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாவட்ட விளையாட்டரங்கம், மற்றும் கடைகள் ஆகியவற்றினை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும், கடைகள் மூலம் வருவாய் நிர்ணயம் செய்ய மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதில் 30% மாவட்ட விளையாட்டு மன்றத்திற்கு கொடுக்க வேண்டும் என்றும், விளையாட்டரங்க கமிட்டி மூலம் அன்னபூர்ணா கௌரிசங்கர் ஹோட்டலுக்கு கொடுத்த 1.24 ஏக்கர் குத்தகையை ரத்து செய்ய வேண்டும் என்றும், ஏற்கனவே மாநகராட்சியால் கடனாக கொடுக்கப்பட்ட ரூ.9 லட்சம் மற்றும் ரூ.2.3 லட்சம் ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகிறது என்றும் இதர இடங்களை மாநகராட்சி பராமரிப்பில் வைத்து கொள்ள வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாநகராட்சி தனி அலுவலர் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 19.11.1985ல் கடிதம் அனுப்பப்பட்டு அதில் விளையாட்டரங்க நிர்வாக அலுவலர் மாநகராட்சிக்கு மேற்படி இடங்களை ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அரசாணை (நிலை எண்).499, ந.நி.(ம)கு.வ. துறை நாள்.17.04.1986 -ல், மாவட்ட விளையாட்டு குழு, ஸ்டேடிய இடம் மற்றும் அதனை சுற்றி கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை அரசின் அனுமதி பெறாமல் குத்தகைக்கு விட்டது தவறு என்றும் அனைத்து உடைமைகளையும் கைக்கொண்டு மாநகராட்சிக்கு ஒப்படைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால், நாளது தேதி வரை விளையாட்டு அரங்கம் மற்றும் கடைகள் மாவட்ட விளையாட்டு துறை வசமே உள்ளது.

மாமன்ற தீர்மானம் எண்.255, நாள்.29.11.2012ல் நேரு உள் விளையாட்டு அரங்கத்தை முழுமையாக மாநகராட்சி வசம் ஒப்படைக்க அரசை கேட்டு கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

விளையாட்டரங்க இடத்தினை பராமரிக்க மாநகராட்சியில் அதற்கான பயிற்சி பெற்ற அலுவலர்கள் இல்லாத காரணத்தால், மாவட்ட விளையாட்டு அரங்கத்தை மட்டும் மாவட்ட விளையாட்டு துறையே பராமரிக்கவும் மேற்கொண்டு எவ்வித கட்டுமானமும் கட்டக்கூடாது என்ற நிபந்தனையுடனும் நில உரிமை மாநகராட்சி பெயரில் இருக்கும் என்ற நிபந்தனையுடன், அதனை சுற்றியுள்ள கடைகளை மட்டும் மாநகராட்சி தன் வசம் எடுத்து மாநகராட்சி சட்ட விதிகளின்படி வாடகைக்கு விடவும் அதன் மூலம் கிடைக்கப்பெறும் ஆண்டு வருமானத்தில் 30% தொகையினை நேரு விளையாட்டரங்கத்தினை பராமரிக்க மாவட்ட விளையாட்டு துறைக்கு வழங்கவும் பரிசீலனை செய்து அரசின் ஆணை பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.13635/2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 417 நாள் 18.03.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 25**

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்துவரும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலிப் பணியாளர்களை மாநகராட்சியில் காலமுறை ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்ய செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பிவைக்க மன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

****

கோயம்புத்தூர் மாநகராட்சி அத்தியாவசியப் பணிகளான குடிநீர் விநியோகம், துப்புரவு பணிகள், பொறியியல் பிரிவு பணிகள் போன்றவற்றிற்கு பணியாளர்கள் பற்றாக்குறை அதிகமாக இருப்பதால் அவசர அவசியம் கருதி, அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள்.19.12.2012ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் ஈர்க்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்துவரும் 59 தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலிப் பணியாளர்களில் வரிசை எண். 9 மற்றும் 17 ல் உள்ள பணியாளர்கள் இறந்துவிட்டனர். வரிசை எண்.28 மற்றும் 31ல் உள்ள பணியாளர்கள் ஓய்வு பெற்றுவிட்டனர். 22, 23 மற்றும் 35ல் உள்ள பணியாளர்கள் பணிக்கு வருவதில்லை. மீதமுள்ள 52 பணியாளர்களை (பட்டியல் தனியாக இணைக்கப்பட்டுள்ளது)

மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படியும் அரசாணை எண்.77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.13.05.1998ல் இம்மாநராட்சிக்கு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் 19.12.2012 முதல் காலமுறை ஏற்ற ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்து தருமாறு அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 5734/2011/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 418 நாள் 18.03.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 26

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் சாலையை கடக்கும்போது விபத்து ஏற்படாமல் எளிதாக சாலையை கடப்பதற்கும் மற்றும் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் இடங்களில் பொதுமக்கள் சாலைகளை எளிதாக கடக்கும் வகையில் கீழ்கண்ட இடங்களில் நடைபாதை மேம்பாலங்கள் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | இடம் |
|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் சாலையில் சாயிபாபா கோவில் அருகில் |
| 2. | அவிநாசி சாலையில் பீளமேடு ஹோப் காலேஜ் சந்திப்பு |
| 3. | திருச்சி சாலையில் சிங்காநல்லூர் சந்திப்பு |

மேற்படி, நடைபாதை மேம்பாலங்கள் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கட்டப்பட உள்ளதால் அரசின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.10338 / 2012 / எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 419 நாள் 18.03.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணி ரூ. 6893.11 லட்சம் மதிப்பீட்டில் தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 50% தொகையான ரூ.3446.56 லட்சம் மத்திய அரசின் மான்யம், 20% தொகையான ரூ.1378.62 லட்சம் மாநில அரசின் வட்டியில்லா கடன், மீதமுள்ள 30% தொகையான ரூ.2067.93 லட்சம் தனியார் பங்களிப்பாகும். இத்திட்டத்திற்கென இம்மாநகராட்சி தி/ள் BEIL-UPL (Consortium), மும்பை கூட்டு நிறுவனத்துடன் கடந்த 19-11-2007-ல் அனுகூல ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் நான்கு குப்பை மாற்று நிலையங்கள் நிறுவுதல், இரண்டாம் கட்ட குப்பை அகற்றும் பணிகளுடன் அதனைச் சார்ந்த பணிகள் மேற்கொள்ளுதல், வெள்ளலூர் குப்பைக்கிடங்கு அமைந்துள்ள இடத்தில் இயற்கை உரம் தயாரிக்கும் நிலையம் (Compost Plant) மற்றும் நல நிலை நிரப்பல் (Sanitary Landfill) அமைப்பு ஆகியவைகளை கட்டி அவற்றினை 20 வருடங்களுக்கு (2008 முதல் 2027-ம் ஆண்டு வரை) இயக்கி பராமரிக்கப்படவேண்டியது. இம்மாநகராட்சியின் பணியானது அன்றாடம் சேகரம் செய்யப்படும் குப்பைகளை மேற்படி தனியார் நிறுவனத்தினரால் கட்டி இயக்கி பராமரிக்கப்பட்டு வரும் குப்பை மாற்று நிலையங்களுக்கு கொணர்ந்து சேர்க்கப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட குப்பைகளை அந்நிறுவனத்தினரால் இரண்டாம் கட்டமாக அகற்றப்பட்டு வெள்ளலூர் குப்பைக்கிடங்கு அமைந்துள்ள இடத்தில் அந்நிறுவனத்தினரால் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு கொணர்ந்து சேர்க்கப்பட்டு பல்வேறு நிலைகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் எதுவுமே செய்ய இயலாத குப்பைகளென தரம் பிரித்து மக்கும் குப்பைகளை ஏரோபிக் டைஜஷன் (Aerobic Digestion) முறையில் இயற்கை உரமாக மாற்றியமைக்கப்படுகிறது. மக்காத மற்றும் எதுவுமே செய்ய இயலாத குப்பைகளை நல நிலை நிரப்பல் அமைப்பில் கொட்டப்பட்டு சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் மூடி கழிவு செய்யப்பட்டு வருகிறது.

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் ஒரு ஊராட்சி ஆகியவைகள் இணைக்கப்பட்டுள்ளதால் இம்மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவின் அளவு நாளொன்றிற்கு சுமார் 250.00 மெட்ரிக் டன் எடையாக கூடியுள்ளது. இதனால் தற்சமயம் இம்மாநகராட்சி மேற்கூறிய தனியார் நிறுவனத்திற்கு நாளொன்றிற்கு சுமார் 850.00 மெட்ரிக் டன் எடையுள்ள தரம் பிரிக்கப்படாத திடக்கழிவுகளை வழங்கி வருகிறது. மேற்கூறிய தனியார் நிறுவனத்தாரால் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் நிலையம் அதிக பட்சமாக 500.00 மெட்ரிக் டன் கொள்ளளவிலான தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை மட்டுமே கையாள்வதற்கு வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டள்ளது. அதனைக்கொண்டு நிறுவனத்தாரால் திறன்பட திடக்கழிவுகளை கையாளப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கூடுதலாக சேகரமாகும் சுமார் 340.00 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகளை சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இம்மாநகராட்சி உள்ளது. மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தினால் இம்மாநகராட்சியில் தினசரி கூடுதலாக சேகரமாகும் திடக்கழிவினை கருத்தில் கொண்டு குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான திட்டத்திற்கு மாமன்றம் கடந்தாண்டின் (2012-13) நிதி நிலை அறிக்கையில் அனுமதி வழங்கியுள்ளது.

இதனைத்தொடர்ந்து இம்மாநகராட்சியின் துணை ஆணையர் தலைமையிலான அதிகாரிகள் குழு கடந்தாண்டு புனே மாநகராட்சி மற்றும் தில்லி மாநகராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் (Waste-to-Energy Plant) அமைப்புகளை கள ஆய்வு செய்து அவற்றினைப்போல் இம்மாநகராட்சியிலும் 500.00 மெட்ரிக் டன் எடை கொள்ளளவிலான குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் அமைப்பு ஒன்றினை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதென மேற்படி குழு அறிக்கை கொடுத்துள்ளது.

எனவே மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தினால் தினசரி கூடுதலாக சேகரமாகும் திடக்கழிவினை சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளதனை கருத்தில் கொண்டு 500.00 மெட்ரிக் டன் எடை கொள்ளளவிலான குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் (Waste-to-Energy Plant) அமைப்பினை வெள்ளலூர் குப்பைக்கிடங்கு அமைந்துள்ள இடத்திலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு தகுதி வாய்ந்த இடத்திலோ தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடன் நிறுவி செயல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:10843/2012/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 420 நாள் 18.03.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி